**சுருக்கம்**

நிர்வாகம் – பொதுத்துறை – திரு.P.செல்வராஜு, உதவிக் கோட்டப் பொறியாளர் [கட்டுமானம் (மற்றும்) பராமரிப்பு], நெடுஞ்சாலைத் துறை, சேலம் அவர்களை முதலமைச்சர் அலுவலகத்தில் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளராக நியமனம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (நிர்வாகம்–1)த் துறை

அரசாணை (நிலை) எண்.739

நாள் 31.08.2017
ஹேவிளம்பி வருடம், ஆவணி – 15
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.80, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஜி)த் துறை, நாள் 01.07.2011.
2. அரசாணை (நிலை) எண்.60, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஜி)த் துறை, நாள் 27.06.2016.
3. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஜி)த் துறை, நாள் 31.08.2017.

*****

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், முதலமைச்சர் அலுவலகத்திற்கென ஐந்தாண்டு காலத்திற்கு தோற்றுவிக்கப்பட்ட 68 பணியிடங்கள், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 16.05.2016 முதல் 22.05.2021 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே பத்தி ஒன்றில் கூறப்பட்டுள்ளவாறு, ஊதியத் தொகுப்பு–3 ரூ.15600–39100/– + தர ஊதியம் ரூ.5400/– கொண்ட பிரிவு அலுவலர் நிலையிலான முதுநிலை நேர்முக உதவியாளர் பணியிடத்தை, நெடுஞ்சாலைத் துறையில் சேலத்திலுள்ள கட்டுமானம் (மற்றும்) பராமரிப்புப் பிரிவில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர் திரு.P.செல்வராஜு அவர்களை நியமனம் செய்யும் பொருட்டு, ரூ.15600–39100/– + தர ஊதியம் ரூ.6600/– என்ற ஊதியத் தொகுப்பு–3 கொண்ட கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர் பணியிடமாக 24.08.2017 முற்பகல் முதல் 22.05.2021 வரையிலோ அல்லது தேவை நிறைவேறும் வரையிலோ, இதில் எது முந்தையதோ அதுவரையில் நிலையுயர்த்தியும், தனியர் இப்பணியிடத்தை விட்டு நீங்கும் பொழுது இப்பணியிடம் தானாக நிலையிறங்கி தொடக்கப் பணியிடமாக (Original Post) மாறிவிடும் எனவும் மேலே படிக்கப்பட்ட அரசாணை மூன்றில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிலை உயர்த்தப்பட்ட பணியிடத்தில், நெடுஞ்சாலைத் துறையில் சேலத்திலுள்ள கட்டுமானம் (மற்றும்) பராமரிப்புப் பிரிவில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர் திரு.P.செல்வராஜு அவர்களை, 24.08.2017 முற்பகல் முதல் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளராக முதலமைச்சர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா....

4. மேற்காணும் அலுவலர் இப்பணியிடத்தை விட்டு நீங்கும்போது, அப்பணியிடம் தானாகவே நிலையிறக்கி தொடர்ப் பணியிடமாக (Original Post) மாறிவிடும்.

5. திரு.P.செல்வராஜு அவர்களது பதவிக்குரிய ஊதியமும், திங்கள் ஒன்றுக்கு சிறப்பூதியமாக, ரூ.800/-ம் (ரூபாய் எண்ணூறு மட்டும்), தற்போதுள்ள நடைமுறைகளின்படி பிற படிகளும் பெறத் குதியுடையவராகிறார்.

6. தனியரை பணியிலிருந்து விடுவிக்குமாறு கண்காணிப்புப் பொறியாளர் / கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் & பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சேலம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ப. செந்தில் குமார்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்

திரு.P.செல்வராஜு, உதவிக் கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சேலம்.
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை-32.
கண்காணிப்புப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சேலம்.
கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் & பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சேலம்.
பொது (பட்டியல்-அ)த் துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்த (ஜி)த் துறை, சென்னை-9.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மனையக தணிக்கை அலுவலர், சென்னை-9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-9.

<u>நகல்:-</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.8.17
அரசு சார்புச் செயலாளர்

31.8.17